## திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(ஏப்ரல் 1-ம் தேதி முதல் ஏப்ரல் 5-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (27.3.15 - 31.3.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | |
| வானம் (ஆக்டா) | |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | |
| காற்றின் திசை | |

**5.4.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>1.4.15 | நாள் 2<br>2.4.15 | நாள் 3<br>3.4.15 | நாள் 4<br>4.4.15 | நாள் 5<br>5.4.15 |
| மழை (மி.மீ.) | 4 | 3 | 3 | 3 | 3 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 36 | 37 | 37 | 36 | 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 | 26 | 25 | 26 | 26 |
| வானம் (ஆக்டா) | 6 | 5 | 5 | 5 | 5 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 80 - 45 | 78 - 42 | 75 - 43 | 77 - 42 | 78 - 45 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 2/வடகிழக்கு | 3/ தென்மேற்கு | 2/ தென்மேற்கு | 3/ மேற்கு | 2/ தென்மேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் /சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| கரும்பு | தூர்கட்டும் பருவம் | தூர்கட்டும் பருவத்திலுள்ள கரும்புக்கு ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் அளிக்கவும். நட்ட 210 - ம் நாள் வரை சொட்டு உரநீர்ப்பாசனம் அளிக்கலாம். ஒவ்வொரு முறையும் சொட்டு உரநீர்ப்பாசனம் அளிக்கும்போது 25 கிலோ தழைச்சத்து மற்றும் 8 கிலோ சாம்பல் சத்து என்ற |

| | | |
|---|---|---|
| | | அளவில் யூரியா மற்றும் வெள்ளை பொட்டாஷ் மூலமாக அளிக்கவும். |
| மா | பூக்கும் பருவம் | மாமரத்தில் பூத்தலை ஊக்குவிக்க யூரியா 5 கிராம், லிட்டர் அல்லது பொட்டாசியம் நைட்ரேட் 10 கிராம், லிட்டர் என்ற அளவிலும் காய் பிடித்தலை மேம்படுத்த என்.ஏ.ஏ. (சூருரு) என்ற வளர்ச்சி ஊக்கியை 20 மில்லி கிராம், லிட்டர் என்ற அளவிலும் தெளிக்கவும். பிஞ்சு கடுகு அளவில் இருக்கும் பருவத்தில் பொட்டாசியம் நைட்ரேட் 20 கிராம், லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| கத்தரி | பூக்கும் பருவம் | கத்தரிக்கு மகசூலை மேம்படுத்த வளர்ச்சி ஊக்கியான டிரையாகான்டனால் 2 பி.பி.எம்.ரூ சோடியம் போரேட் அல்லது போராக்ஸ் 35 மி.கி., லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| தக்காளி | காய்க்கும் பருவம் | தக்காளியில் காய்க்கும் பருவம் முக்கியமான பருவமாதலால் ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் அளிக்கவும். 12- 61- 0 உரம் 1.14 கிலோ, எக்டர், 13- 0- 45 உரம் 6.17 கிலோ, எக்டர் மற்றும் யூரியா 2.8 கிலோ, எக்டர் என்ற அளவில் பாசன நீருடன் சேர்த்து அளிக்கவும். |
| கால்நடை பராமரிப்பு | வெப்பத்தின் தாக்கத்தை குறைத்தல் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக வெப்பநிலையின் தாக்கத்தை குறைக்க கால்நடைகளுக்கு குளிர்ந்த நீர் மற்றும் பசுந்தீவனங்களை போதிய அளவு அளிக்கவும். கொட்டகையை சுற்றிலும் கோணிப்பைகளை கட்டி நீரை தெளித்து அதிக வெப்பநிலையின் தாக்கத்தை மட்டுப்படுத்தவும். |

குறுஞ்செய்தி- மழை: ஏப்ரல் 21 ம் தேதி முதல்5ம் தேதி வரை4:3 மி.மீ. மாமரம் நன்கு பூக்க, காய் பிடிக்க- யூரியா 5 கிராம்/லிட்டர்; என்.ஏ.ஏ. 20 மில்லி கிராம்/லிட்டர் தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி